**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

திருமதி. ஆர். பிரமிளா மொழிபெயர்ப்பாளர் என்பவர் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

SC. No. 93/2017

Prosecution **PW1**

| | |
|---|---|
| Name | ஓவியா |
| Husband / Father Name | க/பெ. தமிழ்கோசெழியன் |
| Village | நாதன்கோவில் |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 08.07.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

குற்றவியல் பல்வகை மனு எண் **2656/2022** அனுமதிக்கப்பட்டு அசா**1** ஆனவரை திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**.**

17.11.2016 ம் தேதிதான் நான் முதன் முதலில் கும்பகோணம் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க சென்றிருந்தேன் அதற்கு முன்பு அந்த நீதிமன்றத்திற்க நான் சாட்சியம் அளிக்க செல்லவில்லை. 17.11.2016 ம் தேதியில் எனக்கு சார்வு ஆன சாட்சிய சம்மன் பேரில்தான் நான் சென்றிருந்தேன். 17.11.2016 ம் தேதி ஏன் அந்த நீதிமன்றத்தில் என்னை விசாரிக்கவில்லை என்று கேட்டால் எதிரிகள் தரப்பில் வாய்தா கோரப்பட்டது. வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. 17.11.2016 ம் தேதி அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த எதிரிகள் 8 பேரும் ஆஜர் ஆகி இருந்தார்கள். 17.11.2016 ம் தேதிக்கு முன்பு ஒரு முறை சாட்சியம் அளிப்பதற்கு நான் நீதிமன்றத்திற்கு சென்றிருந்து என்னை ஏன் விசாரிக்கப்படவில்லை என்று கேட்டால் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் நீதிமன்றத்திற்க செல்லவில்லை ( சாட்சி மீண்டும் தானாக தனக்கு சாட்சிய சம்மன் வரவில்லை என்றும் நீதிமன்றத்திற்கு ஆஜராகவில்லை என்றும் சாட்சியம் அளிக்கின்றார்.) 17.11.2016 ம் தேதி நானும் என் அம்மா, விஜி, வினோத், சுந்தர் ஆகியோர்கள் அன்றைய தினம் நீதிமன்ற படிக்கட்டில் உட்கார்ந்திருந்தோம். விஜி என்பவர் எனக்கு மாமன் முறை வினோத், சுந்தர் ஆகியோர்கள்

எனக்கு சகோதரர் முறை என்றால் அவ்வாறில்லை. விஜியும் வினோத்தும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள்தான். அவர்கள் இருவரும் அடிக்கடி என் வீட்டிற்கு வந்து போவார்கள் என்றால் அவ்வாறில்லை. விஜி, வினோத் மற்றும் சுந்தர் ஆகியோர்கள் என்னுடைய உறவுக்காரர்கள் என்று சொன்னால் இல்லை. நான் என் முன் விசாரணையில் கையெழுத்து போட்டுவிட்டு போகவேண்டும் என்பதால் நாங்கள் நீதிமன்ற படிக்கட்டில் உட்கார்ந்திருந்தோம் என்ற விவரத்தை புகாரிலோ போலிஸ் விசாரணையிலோ சொல்லி உள்ளேனா என்று கேட்டால் சொல்லியுள்ளோம். அவ்வாறு நாங்கள் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நான் என் முன் விசாரணையில் என்னை பார்த்து ஐய்யப்பன் குச்சிக்காரி தேவடியா உன் அப்பனை கொன்றதுபோல் சாட்சி சொல்ல வந்தால் உன்னையும் கொன்றுவிடுவோம் என்று புகாரிலும் போலிஸ் விசாரணையிலும் நான் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபிறகு என்னை மிரட்டியதாக நான் புகாரில் சொல்லி உள்ளேனா என்று கேட்டால் இல்லை. கும்பகோணம் நீதிமன்றத்திற்கு நான் சாட்சியம் அளிக்க சென்றிருந்த வழக்கின் குற்ற எண் 70/2013. நான் தற்போது ஆஜராகி சாட்சியம் அளிக்கும் இந்த வழக்கின் குற்ற எண் என்ன என்று கேட்டால் 115/2016. இந்த வழக்கின் புகாரை நான்தான் கைப்பட எழுதிக்கொடுத்தேன். குற்ற எண் 70/2013 வழக்கில் அன்றைய தினம் எதிரிகளான அம்பிகாபதி மற்றும் கந்தகுமார் ஆகியோர்கள் அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்று சொன்னால் அம்பிகாபதி வந்திருந்தார். கந்தகுமார் வரவில்லை. 17.11.2016 ம் தேதியில் 8 நபர்கள் வந்தார்கள் என்பது உண்மையா அல்லது 7 நபர்கள் வந்தார்கள் என்பது உண்மையா என்று கேட்டால் 7 நபர்கள் தான் வந்தார்கள். 17.11.2016 ம் தேதி அந்த நீதிமன்றத்தில் 8 நபர்களும் வந்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது பொய்தான். 17.11.2016 ம் தேதி அம்பிகாபதியும் கந்தகுமாரும் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றும் நாங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில்தான் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் 17.11.2016ம் தேதியில் இருந்து மறு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்ட பின்பு அன்று ஆஜரான எதிரிகள் நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தபோது நான் தான் பின்னால் வந்த இந்த வழக்கின் எதிரி சுலோச்சனா என்பவரை அடித்து அவரது சேலையை கிழித்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த சம்பவம் அன்றைய தினம் நீதிமன்ற வளாகத்திற்குள் வந்திருந்த அனைவருக்கும் தெரியும் என்று சொன்னால் அவ்வாறில்லை. சுலோச்சனா என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து நானே முன்கூட்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக கூறி வழக்கிலிருந்து தப்பிப்பதற்கு ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் அவ்வாறில்லை. சுலோச்சனா

குடும்பத்தை பழிவாங்க வேண்டும் என்பதற்காக மேலும் ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டு அதற்கு தகுந்தாற்போல் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொல்லியதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அது கற்பனையானது என்று சொன்னால் அது சரியல்ல.

மறுவிசாணை இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு

என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/- டி.வி. மணி)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

திருமதி. ஆர். பிரமிளா மொழிபெயர்ப்பாளர் என்பவர் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

SC. No. 93/2017

Prosecution **PW 2**

| | |
|---|---|
| Name | கோமதி |
| Husband / Father Name | ஆனந்த் |
| Village | நாதன்கோவில் |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 08.07.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

குற்றவியல் பல்வகை மனு எண் **2656/2022** அனுமதிக்கப்பட்டு அசா**2** ஆனவரை திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**.**

கும்பகோணம் நீதிமன்றத்திற்கு 17.11.2016க்கு முன்பு நான் போனேனா என்று எனக்கு ஞாபகம் இல்லை. 17.11.2016ம் தேதியில் சாட்சியம் அளிப்பதற்காக நீதிமன்றம் சென்றிருந்தேன் ஆனால் அன்றைய தினம் விசாரிக்கப்படவில்லை. நாங்கள் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தோம், சத்தம் போட்டதும் பக்கத்திலிருந்து வெளியிலிருந்து விஜியும் வினோத்தும் வந்தார்கள். விஜியும் வினோத்தும் வந்து என்னவென்று கேட்கவில்லை அவர்களிடம் நாங்கள் தான் சொன்னோம். நான் என் முதல் விசாரணையில் சொல்லிய சுலோச்சனா என்பவர் சாட்சி சொல்ல வரக்கூடாது என்று சொல்லி படிக்கட்டில் உட்கார்ந்திருந்த என் மகள் ஓவியாவின் முதுகில் ஓங்கி அடித்தார் என்று நான் போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் நீதிமன்றத்திற்குள் போவதற்கு முன்பாகவே சண்டை நடந்துவிட்டது. நீதிமன்றத்திலும் அதனால் தேதி தள்ளி வைத்தார்கள். நான் என் முன்விசாரணையில் சொல்லியதுபோல் அதுபோன்ற சம்பவம் நடக்கவில்லை என்றும் ஓவியாதான் சுலோச்சனாவை அடித்து சேலையை கிழித்துவிட்டார் என்றும் சுலோச்சனா என் மகள் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று முந்திக்கொண்டு சுலோச்சனாவும் மற்றும் ஐய்யப்பனும் என் மகளை

தாக்கினார்கள் என்று கற்பனையாக என் மகள் மூலம் பொய் புகார் கொடுக்கப்பட்டு அதற்கேற்றார்போல் நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல,. நான் என் முதல் விசாரணையில் சொல்லியதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விஜி என்பவர் ஓவியாவிற்கு மாமன் முறையா என்று கேட்டால் அவர் உறவுக்காரர். விஜி, வினோத், சுந்தர் என் ஜாதிக்காரர்கள் என்றால் இல்லை. மூவரும் என் ஜாதிக்காரர்கள் இல்லை என்றும் என் சொந்தக்காரர்கள் இல்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/- டி.வி. மணி)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

திருமதி. ஆர். பிரமிளா மொழிபெயர்ப்பாளர் என்பவர் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

SC. No. 93/2017

Prosecution **PW 3**

| | |
|---|---|
| Name | விஜி (எ) விஜயசீலன் |
| Husband / Father Name | திராவிடமணி |
| Village | நாதன்கோவில் |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 08.07.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

குற்றவியல் பல்வகை மனு எண் **2656/2022** அனுமதிக்கப்பட்டு அசா**3** ஆனவரை திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக ஓவியா காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கும்போது நான் செல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சி சொல்ல போயிருந்த நாளிலிருந்து எத்தனை நாள் கழித்து விசாரித்தார்கள் என்று கேட்டால் அன்றை தினம் நான் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன் அப்போது விசாரித்தார்கள். 17.11.2016 ம் தேதி எனக்கு சார்வான சாட்சிய சம்மன் பேரில்தான் நான் கும்பகோணம் நீதிமன்றத்திற்கு சென்றேன் என்று சொன்னபோது போலிஸ் விசாரணை மையத்தில் எனக்கு சார்வான சாட்சிய சம்மனை கொடுத்தேனா என்று கேட்டால் கொடுத்தேன். 17.11.2016 ம் தேதி எனக்கு சாட்சிய சம்மன் கொடுக்கப்படவில்லை என்றும் நான் அன்றைய தினம் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை

என்று சொன்னால் சரியல்ல. 17.11.2016ம் தேதியில் நான் நீதிமன்றத்தில் ஆஜராக போயிருந்தபோது 7 எதிரிகள் வந்திருந்தார்கள். நான் சொல்வதுபோல் 7 எதிரிகள் வரவில்லை என்றும் 6 எதிரிகள் தான் வந்திருந்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. தற்போது அசா1 நீதிமன்றத்தில் ஆஜராகி 7 எதிரிகள் தான் வந்திருந்தார்கள் என்று சாட்சியம் அளித்ததை வெளியில் வந்து என்னிடம் சொன்னதன் பேரில்தான் 7 எதிரிகள் வந்திருந்தார்கள் என்று நான் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. ஓவியாவின் வீடும் என் வீடும் ஒரே தெருவில் அருகருகே உள்ளது. நான் அடிக்கடி ஓவியா வீட்டிற்கு மாமா வீடு என்பதால் போய்வருவேன். 17.11.2016ம் தேதி கும்பகோணம் நீதிமன்றத்தில் நடந்த உண்மை விவரம் எனக்கு நேரில் தெரியாது என்றும் ஓவியா ஒரு பொய்யான புகார் கொடுத்து அதற்கு தகுந்தாற்போல் கும்பகோணம் நீதிமன்றத்திற்கு நான் போனதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன். என்று சொன்னால் சரியல்ல. 17.11.2016ம் தேதியில்தான் சுலோச்சனாவை ஓவியா அடித்து சேலையை கிழித்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. என் முன் விசாரணையில் சொல்லியதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஓம்/- டி.வி. மணி)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

திருமதி. ஆர். பிரமிளா மொழிபெயர்ப்பாளர் என்பவர் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்படுகிறது.

SC. No. 93/2017

Prosecution **PW4**

| | |
|---|---|
| Name | வினோத் |
| Husband / Father Name | கிருஷ்ணமூர்த்தி |
| Village | நாதன்கோவில் |
| Taluk | |
| Occupation | |
| Religion | |
| Age | |
| Date | 08.07.2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

குற்றவியல் பல்வகை மனு எண் **2656/2022** அனுமதிக்கப்பட்டு அசா**4** ஆனவரை திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்று கேட்டால் சம்பவம் நடந்த அன்றைய தினம் மதியம் 2.30 மணியளவில் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்க வேண்டும் என்று சொல்லி சம்மன் அனுப்பவில்லை. என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் காவல்நிலையத்திற்கு மதியம் 2.30 மணிக்கு சென்றேன். காவல்நிலையத்திற்கு தானகவே போனேன். நான் சொன்னதுபோல் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் நான் அன்றைய தேதியில் காவல்நிலையத்திற்கு போகவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 17.11.2016ம் தேதியில் நான் கும்பகோணம் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்துகொள்ள எனக்கு சார்வான சாட்சிய சம்மனை நான் போலிசாரிடம் கொடுத்தேன். 17.11.2016ம் தேதியில் சாட்சியம் அளிக்க எனக்கு சம்மன் வரவில்லை என்றும் அன்றைய தேதியில் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2.30 மணிக்கு போலிசார் என்னை விசாரித்தபோது விஜியையும் விசாரித்தார்கள். நானும் ஓவியாவும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள். நான் ஓவியாவிற்கு சித்தப்பா முறை. நான் ஓவியாவிற்கு உறவுக்காரர் என்பதால் 17.11.2016 அன்று நடக்காத சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் முதல்

விசாரணையில் சொல்லியதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்/- டி.வி. மணி)
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
(விரைவு மகிளா நீதிமன்றம்)
தஞ்சாவூர்.